# 70

# பிரதான கட்டளை

## (28:16-20)

*உலகத்தின் எல்லா மக்களினங்களையும் சீஷர்களாக்கும்படியான இயேசுவின் அழைப்பான பிரதான கட்டளையை அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்தலுடன் மத்தேயு சுவிசேஷம் முடிவடைகிறது. இயேசு உயிர்த்தெழுந்தபின், எருசலேமில் உள்ள ஒலிவ மலையில் தமது அப்போஸ்தலர்களுக்குத் தரிசனங்களைக் கொடுத்தது அல்லது அவர் பரலோகத்திற்கு ஏறிச்சென்றது ஆகியவற்றை மத்தேயு தமது சுவிசேஷத்தில் உள்ளடக்கவில்லை. உலகளாவிய சுவிசேஷ ஊழியம் - யூதர்கள் மற்றும் புறஜாதிகள் ஆகிய அனைவரும் இரட்சிக்கப்படுதல் - என்பதன் மீதே அவரது கவனக்குவிப்பு இருந்தது.*

### *காட்சி அமைவு (28:16, 17)*

***16பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள்.***

***17அங்கே அவர்கள் அவரைக் கண்டு, பணிந்து கொண்டார்கள்; சிலரோ சந்தேகப்பட்டார்கள்.***

***வசனம் 16.*** ஆங்கில வேதாகமத்தில் இவ்வசனத்தில் உள்ள but (*de*) என்ற இணைப்புச் சொல், இயேசு உயிருடன் இருந்தார் என்ற சத்தியத்திற்கு விரோதமாக, யூதத்தலைவர்களாலும் காவல் சேவகர்களாலும் பரப்பப்பட்ட முந்திய பொய்யான அறிக்கைக்கு நேர்மாறானதாக உள்ளது. இயேசு உயிர்த்து எழுந்திருந்தார் என்பதை அப்போஸ்தலர்கள் விசுவாசிக்கத் தொடங்கியபோது, அவர்களின் துக்கத்தை வெற்றிகொண்ட சந்தோஷமும் வியப்பும் தான் எவ்வளவாக இருந்திருக்கும்! அடுத்து என்ன நடக்கும் என்பதைப் பற்றிய நிச்சயம் எதுவும் இல்லாதவர்களாக அவர்கள், பெண்கள் மூலமாகத் தூதராலும் இயேசுவினாலும் அனுப்பப்பட்டிருந்த அறிவுத்துதல்களுக்குக் கீழ்ப்படிந்தனர் *(28:7, 10)*. ***பதினொரு சீஷர்களும்*** - இவர்களுடன் யூதாஸ் இப்போது இருக்க வில்லை *(27:5)* - ***கலிலேயாவுக்குச்*** சென்றனர், அங்கு இயேசு அவர்களுக்காகக் காத்திருந்தார். அப்போஸ்தலர்கள், அவருக்கான தங்களின் உண்மையான ஊழியம் இனித்தான் தொடங்க இருந்தது என்பதை இன்னமும் உணர்ந்தறியவில்லை.

அப்போஸ்தலர்கள் ***இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குச் சென்றனர்.*** கர்த்தர் தமது மரணத்திற்கு முன்னர் அவர்களுக்குக் கொடுத்திருந்த அறிவுறுத்தல்கள் ஒன்றில் அவர்களுக்கு இதைப் பற்றிக் கூறியிருக்கலாம் *(26:32)*.

*அவர் பின்னும்கூடப் பெண்களிடத்தில் பேசியபோது அந்த மலை எது என்று குறிப்பிட்டிருக்கலாம் (28:10). மத்தேயு சுவிசேஷத்தில் குன்றுகளும் மலைகளும் தேவனுடைய வெளிப்படுத்துதல்களும் அவருடன் பேசுதலும் நடைபெற்ற இடங்களாக உள்ளன (5:1; 14:23; 15:29; 17:1; 21:1). இந்த மலையின்மீது இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குப் பிரதான கட்டளையைக் கொடுத்தார்.*

***வசனம் 17.*** *அப்போஸ்தலர்கள் இயேசுவைக் கண்டபோது, பெண்கள் செய்திருந்தது போன்றே* ***பணிந்துகொண்டார்கள்*** *(28:9); ஆனால் அந்தக் குழுவில் கூடியிருந்தவர்களில்* ***சிலரோ சந்தேகப்பட்டார்கள்*** (*distazō*). *சந்தேகப்பட்டவர்களைப் பற்றி இன்னொரு கண்ணோக்கை மேற்கொண்ட* R. T. France, *அவர்கள், இங்கு பயன்படுத்தப்பட்ட வினைச்சொல்லை வலியுறுத்தினார்: Distazō என்ற வினைச் சொல்லானது அமைவுபெற்ற அவிசுவாசத்தைக் குறிப்பதில்லை, ஆனால் இது நிச்சயமற்ற தன்மை அல்லது தயக்கம் என்ற நிலையையே குறிக்கிறது (ஒப்பிடுக 14:31, இதுவே புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்ட இன்னொரு ஒரே இடமாக உள்ளது).[1] உயிர்த்து எழுந்திருந்த கர்த்தரைக் கண்டிருந்த பெண்களின் சாட்சியத்தை விசுவாசிப்பதில் அப்போஸ்தலர்கள் மிகவும் மெ துவாக இருந்தனர் (லூக்கா 24:11). ஆகையால் இயேசு தமது கரங்களையும் தமது பாதங்களையும் காண்பித்து அவர்களின் முன்னிலையில் மீனை உண்டு (லூக்கா 24:39-43; காண்க யோவான் 20:24-29), தமது உயிர்த்தெழுதலுக்கு உறுதியான நிரூபணத்தை அவர்களுக்கு அளித்தார். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் காண்பதற்கு வாய்ப்புக்கொண்டிராத கலிலேய மக்களே சந்தேகப்பட்டிருந்தனர் என்பது உறுதி.*

## *இயேசுவின் கட்டளை (28:18-20)*

*இயேசு "வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப்" போதித்திருந்தார் (7:29). திமிர்வாதக்காரரைக் குணமாக்கியதன் மூலம் அவர் பாவங்களை மன்னிக்கத் தமக்கிருந்த அதிகாரத்தைச் செயல்விளக்கப்படுத்தினார் (9:2-8). பூமியில் இருந்தபோது - போதிக்கவும், குணமாக்கவும், பாவங்களை மன்னிக்கவும் - அவர் கொண்டிருந்த அதிகாரம் பிதாவினால் அவருக்குத் தரப்பட்டிருந்தது (11:27; காண்க 21:23-27). இயேசு வரையறைக்குட்பட்ட கட்டளையைக் கொடுத்துப் பன்னிருவரை அனுப்பியிருந்தபோது அவர்களுக்கு "அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும்" அதிகாரம் அளித்திருந்தார் (10:1). மீண்டும் ஒருமுறை அவர்களை அவர் அனுப்பிக் கொண்டிருந்தார், ஆனால் இந்த வேளையில் இரட்சிப்பின் முழுச் செய்தியுடன் அவர்களை உலகம் முழுவதற்கும் அனுப்பினார்.*

***சகல அதிகாரமும் (28:18)***

***18 அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.***

***வசனம் 18.*** *இயேசு* ***வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக்***

**கொடுக்கப்பட்டிருக்கிறது** என்று அறிவித்தார். அவர் தமக்குப் பிதாவானவர் மிகவும் உயர்ந்த அதிகாரத்தைக் கொடுத்திருந்ததாக அர்த்தப்படுத்தினார். அவர் கிறிஸ்தவ யுகத்தின் கர்த்தராக இருக்கும்படி பிதாவினால் தேர்ந்து கொள்ளப்பட்டிருந்தார். பிற்பாடு பவுல், "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, ... நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" என்று கூறுவார் (பிலிப்பியர் 2:9). [கிறிஸ்தவ] மார்க்கத்தில் இன்றைய நாட்களில் செய்யப்படும் ஒவ்வொரு விஷயமும் "அவருடைய நாமத்தில்" அல்லது அவரது அதிகாரத்தினால் செய்யப்பட வேண்டும். அவரது உயிர்த்தெழுதலுக்கு முன்பு விஷயம் இவ்வாறு இருந்ததில்லை (யோவான் 15:16; 16:23-26), ஆனால் மனித வரலாற்றில் இந்தக் கடைசி யுகத்தில் விஷயம் இவ்வாறே உள்ளது (லூக்கா 24:46, 47; நடபடிகள் 2:38; 4:12; கொலோசெயர் 3:17). இயேசு உயர்வாக மேன்மைப்படுத்தப் பட்டவராக (22:44; 26:64; நடபடிகள் 2:34-36; பிலிப்பியர் 2:9-11), தேவனுடைய வலதுபாரிசத்திற்கு ஏறிச்சென்றார். அவர் அரியணை மீது அமர்ந்து தமது இராஜ்யத்தில் ஆட்சி செய்துகொண்டிருக்கிறார் (1 கொரிந்தியர் 15:24-28); அவர் தமது சபைக்குத் தலையாக இருக்கிறார் (எபேசியர் 1:20-23; கொலோசெயர் 1:18).

### *சகல ஜாதிகளையும் சீஷராக்கி (28:19)*

**19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**

**வசனம் 19.** எல்லா அதிகாரமும் கொண்டுள்ளவராக இயேசு, தமது சீஷர்களிடத்தில் **நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதி களையும் சீஷராக்குங்கள்** என்று கூறினார். "புறப்பட்டுபோய்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க எச்சவினையானது, "நீங்கள் புறப்பட்டுப் போகையில்" அல்லது "நீங்கள் புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கையில்" என்று தரவழைக்கப்பட முடியும். இருப்பினும் - "சீஷராக்கி" என்ற விஷயத்தில் - ஒரு எச்சவினையானது ஒரு கட்டளையுடன் இணைக்கப்பட்டு இருக்கையில் அது கட்டளையின் வலிவைப் பகிர்ந்து கொள்கிறது.[2] மோரீஸ் அவர்கள் இதைப் பின்வருமாறு கூறினார்: "சீஷராக்குதல் என்பதன் மீது வலியுறுத்தம் இருந்தாலும், இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு, புறப்பட்டுப் போகவும் சீஷராக்கவும் வேண்டும் என்று கட்டளையிட்டார்."[3]

"சீஷராக்குதல்" (*mathēteuō*) என்பது மக்களுக்குப் போதித்து அவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் ஆவதற்கு அவர்களை வழிநடத்துதல் என்று அர்த்தப்படுகிறது. சீஷத்துவம் என்பது, இயேசுவின்மீது தனிப்பட்ட வகையில் நம்பிக்கை வைத்தலை மாத்திரமல்ல, ஆனால் அவரது ஒழுக்கத் தர அளவைகளுக்கு ஒப்புக்கொடுக்க மனவிருப்பம் கொண்டிருத்தலையும் உள்ளடக்குகிறது.

இயேசு **சகல ஜாதிகளுக்கும்** என்ற தமது மனக்காட்சியைத் தமது அப்போஸ்தலர்களுக்குத் தெரிவித்தார். வரையறைக்கு உட்பட்ட கட்டளையில் அப்போஸ்தலர்கள் "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல்

வீட்டாரிடத்திற்கு" மாத்திரம் போகும்படி அறிவுறுத்தப் பட்டிருந்தனர்; அவர்கள் "புறஜாதியார் நாடுகளுக்கு" போகுதல் அல்லது "சமாரியர் பட்டணங்களில்" பிரவேசித்தல் (10:5, 6) என்பவற்றில் (அவ்விடங்களுக்குப் போகாதிருக்கும்படி) கட்டுப் படுத்தப்பட்டிருந்தனர். இந்தக் கட்டளையில், சுவிசேஷச் செய்தியானது எல்லா மக்களுக்குமானதாக உள்ளது (மாற்கு 16:15).

"ஜாதிகள்" என்பதற்கான (*ethnos* என்பதில் இருந்து வரும்) கிரேக்க வார்த்தையானது அடிக்கடி, "புறஜாதிகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (4:15; 6:32; 10:5, 18; 12:18, 21) - அதாவது, இவர்கள் இஸ்ரவேல் மக்களில் இருந்து வேறுபட்டவர்களாவர். இந்த சந்தர்ப்பப் பொருளில் இச்சொற்றொடர் இஸ்ரவேல் மக்களையும் உள்ளடக்குகிறது. பிரதான கட்டளை பற்றி லூக்கா சுவிசேஷத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள மற்றொரு விபரத்தில், இயேசு "மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் *சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது*" என்று கூறினார் (லூக்கா 24:47; வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது). சுவிசேஷம் முதலில் எருசலேமில் யூதர்களுக்குப் பிரசங்கிக்கப் பட்டது (நடபடிகள் 1-7) பிற்பாடு அது யூதேயா, சமாரியா (நடபடிகள் 8; 9) மற்றும் பெரிய அளவில் ரோமப் பேரரசு ஆகியவற்றில் பரப்பப் பட்டது (நடபடிகள் 10-28).

மத்தேயு சுவிசேஷ விபரம், ஆபிரகாமுடன் இயேசுவின் வம்சவழித் தொடர்பை நிலைநாட்டுதல் கொண்டு தொடங்கிற்று (1:1, 2). இஸ்ரவேல் மக்கள் இருக்கத் தொடங்கும் முன்னரே, ஆபிரகாமின் சந்ததி மூலமாக எல்லா மக்களினங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்று அவருக்குத் தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்தார் (ஆதியாகமம் 12:3; 22:18). இந்த வாக்குத்தத்தம், எல்லா மக்களினங்களுக்கும் இரட்சிப்பை அருளுகிற இயேசுவை முன்கண்ணோக்கிற்று (கலாத்தியர் 3:8, 16). பழைய ஏற்பாட்டின் கீழ், இஸ்ரவேல் மக்களைத் தேவன் தமது விசேஷித்த மக்களாக தேர்ந்துகொண்டார். இருப்பினும் புதிய உடன்படிக்கையில் தேவனுடைய மக்களை அடையாளப்படுத்துதல் "ஒரு மக்களினத்தின் அடிப்படையில் அல்ல, ஆனால் தேவனுடைய மேசியா மூலமாக தேவனுடன் கொள்ளும் உறவை அடிப்படையாகக் கொண்டுள்ளது (காண்க ... 3:9; 8:11-12; 12:21; 21:28-32, 41-43; 22:8-10; 24:14, 31; 26:13)."[4]

சீஷர்களாக்குதலின் ஒரு பகுதி, அவர்களுக்கு **ஞானஸ்நானங்கொடுத்தலை** உள்ளடக்குகிறது. ஞானஸ்நானம் (தண்ணீருக்குள் முழுக்காட்டுதல்) என்பது யோவான் ஸ்நானனுடைய ஊழியத்தில் ஒரு முக்கிய பகுதியாக இருந்திருந்தது, மக்கள் மனந்திரும்பி, வரவிருந்த இராஜ்யத்திற்கு ஆயத்தமாகும்படி அவர்களை அவர் அழைத்தார் (3:6ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இயேசு ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவரது ஊழியமானது யோவானுடைய ஊழியத்தின்மீது நிழலிடத் தொடங்கிற்று: "யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங்கொடுத்தார் (இயேசு தாமே ஞானஸ்நானம் கொடுக்கவில்லை, ஆனால் அவரது சீஷர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார்கள்)" (யோவான் 4:1, 2). மக்களை சீஷராக்கும் செயல்முறையில், அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தல் என்று இங்கு இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டது, அவரது உரையைக் கேட்டவர்களுக்குப் பெரிய வியப்புக்குரிய விஷயமாக இருந்திராது.

பிரதான கட்டளையின் ஞானஸ்நானம், யோவான் மற்றும்

இயேசுவின் சீஷர்களால் முன்பு நிகழ்த்தப்பட்ட ஞானஸ்நானத்தில் இருந்து வேறுபட்டுள்ளது. இந்த வேளையில் இயேசு சிலுவையின் மீது மரித்திருந்து கல்லறையில் இருந்து உயிர்த்திருந்தார். அப்போஸ்தலர்கள் முதன்முதலாக முழு சுவிசேஷத்தைப் பிரசங்கித்து பிரதான கட்டளையின் ஞானஸ்நானத்தைச் செயல்படுத்தியபோது, இராஜ்யம் (சபை) வந்திருந்தது (நடபடிகள் 2).

சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த கர்த்தர் பற்றிப் போதிக்கப்பட்டு விசுவாசிக்கத் தொடங்கும் எந்த ஒரு நபரும், ஞானஸ்நானத்திற்குத் தகுதியுள்ளவராக இருக்கிறார். அந்த நபர் முதலாவது மனந்திரும்ப அல்லது பாவத்தை விட்டுத் தேவனிடமாகத் திரும்ப வேண்டும் (லூக்கா 13:3, 5; நடபடிகள் 2:38). அவரது மனந்திரும்புதலைத் தொடர்ந்து, கிறிஸ்து தேவனுடைய குமாரனாக இருக்கிறார் என்ற விசுவாசத்தை அவர் அறிக்கை செய்ய வேண்டும் (நடபடிகள் 8:37; ரோமர் 10:9, 10). விசுவாசத்தின் நிறைவுச்செயல் என்ற வகையில், ஞானஸ்நானம் பெறவேண்டும் (நடபடிகள் 2:38).

ஞானஸ்நானம் என்பது "பாவமன்னிப்புக்கென்று" (நடபடிகள் 2:38) பெறப்படுவதாக உள்ளது என்பது உறுதி, ஏனெனில் கீழ்ப்படிதலின் இந்தத் தாழ்மையான செயலில் ஒருவர், சிலுவையில் கிறிஸ்துவின் தியாகமான மரணத்தினுடைய ஆசீர்வாதங்களைப் பெறுகிறார். இயேசு, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்று கூறினார் (மாற்கு 16:16). ஞானஸ்நானம் என்பது இரட்சிப்பிற்கான முன்தேவையாக உள்ளது என்பது தெளிவாகிறது. ஞானஸ்நானத்தின் மூலம் ஒருவர் கிறிஸ்துவுக்குள் (ரோமர் 6:3, 4) மற்றும் அவரது சபைக்குள் (1 கொரிந்தியர் 12:13) பிரவேசிக்கிறார் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெறுகிறார் (நடபடிகள் 2:38).

பிரதான கட்டளையின் ஞானஸ்நானம், **பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே** தரப்பட வேண்டியதாக உள்ளது. இந்தச் சொற்றொடரானது தேவத்துவத்தில் உள்ள மூவரைப் பற்றிய சுருக்கமான விவரிப்பாக உள்ளது (3:17ன் மீதான விளக்கங்களைக் காணவும்). "நாமம்" என்பதற்கான கிரேக்க வார்த்தை ஒருமைச் சொல்லாக, தேவனுடைய ஒன்றித்த தன்மையைச் சுட்டிக் காண்பிப்பதாக உள்ளது. தேவத்துவத்தின் மூன்று நபர்களும், பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் என்று அடையாளப்படுத்தப் படுகின்றனர் (காண்க 1 கொரிந்தியர் 12:4-7; 2 கொரிந்தியர் 13:14; எபேசியர் 4:4-6; 1 பேதுரு 1:2; யூதா 20, 21).

பொதுவான கருத்து தெளிவாக இருந்தாலும், இந்தச் சொற்றொடரின் மிகச்சரியான அர்த்தம் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது. இது ஞானஸ்நானம் பெறுபவரிடத்தில் பேசப்பட வேண்டிய ஒரு சூத்திரமாக உள்ளதா? இது ஏற்புடைய வழக்கமாக இருக்கையில், நடபடிகள் புத்தகத்தில், கிறிஸ்தவர்களானவர்கள் "இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்" கொண்டதாக (நடபடிகள் 2:38; 10:48) அல்லது "கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்" கொண்டதாக (நடபடிகள் 8:16; 19:5) கூறப்பட்டுள்ளது.

இந்தக் காரணத்தினால், இந்தச் சொற்றொடரானது, ஞானஸ்நானத்தின்

*பின்னால் உள்ள அதிகாரத்துவத்தை மாத்திரமே குறிப்பதாக இருக்க வேண்டும். "நாமத்தினாலே" என்பது "அதிகாரத்தினாலே" என்று அர்த்தப்படுகிறது. தேவத்துவத்தில் ஒன்றிப்பு இல்லாமை என்பது இருப்பது இல்லை என்பதால், பிரதான கட்டளைக்கும் நடபடிகள் புத்தகத்தில் உள்ள வரலாற்றுப் பூர்வமான பதிவுக்கும் இடையில் முரண்பாடு எதுவும் இருப்பதில்லை.*

*[நாமத்தி] "லே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (eis) கிரேக்க முன்னிடைச் சொல், "உள்ளாக" என்று அர்த்தப்படுகிறது. "நாமத்திலே" என்ற சொற்றொடர், மூவரும் ஒன்றாக உள்ள தேவனுக்கு உடையவராகுதலைச் சுட்டிக்காண்பிக்கிறது. இவ்விஷயத்தில் இச்சொற்றொடர், தேவனுடன் விசுவாசி கொள்ளும் புதிய பற்றுறுதியையும் உறவுமுறையையும் பற்றியதாக உள்ளது.*

***நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் ...***
***அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். (28:20)***

***[20]நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். ...***

***வசனம் 20.*** *ஞானஸ்நானம் என்பது, ஒரு முடிவாக அல்ல, ஆனால் ஒரு புதிய தொடக்கமாகக் கண்ணோக்கப்பட வேண்டும். புதிய சீஷர்களுக்கு அப்போஸ்தலர்கள்,* **இயேசு கட்டளையிட்ட யாவற்றையும் போதிக்க வேண்டும்** *என்று இயேசு கூறினார். அவர் ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் காலமாக அவர்களுக்கு அறிவுறுத்துதல் கொடுத்திருந்தார், அவர்களுக்குத் தனிச்சிறப்பான சத்தியங்கள் பலவற்றைப் போதித்திருந்தார். அவர் பரத்துக்கேறியபின்பு, பரிசுத்த ஆவியானவரை அவர்களுக்கு அனுப்புவார், அவர், அவர்களுக்குப் போதித்து அவர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார் (யோவான் 14:26; 15:26, 27; 16:12-15). இயேசுவின் கட்டளைக்கு அப்போஸ்தலர்கள் உண்மையாக இருந்தது பற்றியும் புதிய சீஷர்களை உண்டாக்கினது பற்றியும் நடபடிகள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது: "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (நடபடிகள் 2:42).*

***சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் (28:20)***

***[20]... இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.***

***வசனம் 20.*** *இயேசு, எப்போதும் தங்கியிருக்கும் தமது பிரசன்னம் பற்றிய வாக்குத்தத்தம் கொண்டு பிரதான கட்டளையை முடித்து வைத்தார்:* **இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்.** *கிறிஸ்து மறுபடியும் வந்து பரலோகத்தில் நித்திய வாழ்வு தொடங்கும்போது, கிறிஸ்தவ யுகம் முடிவடையும். அந்தக் கணம் வரையிலும், இயேசு தமது ஊழியத்தைச் செய்யும் தமது சீஷர்களுடன் எப்போதும்*

*இருப்பார். மத்தேயு 1:23ல், குழந்தையாக இருந்த இயேசுவுக்கு "இம்மானுவேல்" என்று பெயரிடப்பட்டது. நம்மை ஆளுகிற ஆண்டவராகிய இயேசு, "இம்மானுவேல்" என்ற தமது பெயர் சுட்டிக்காண்பிக்கிற அர்த்தமான "தேவன் நம்மோடு" என்றபடி மிகச்சரியாகத் தமது சீஷர்களுடன் இருக்கிறார்.[5]*

✧✧✧✧✧ ***பாடங்கள்*** ✧✧✧✧✧

## *பிரதான கட்டளையின் மாபெரும் தன்மை (28:18-20)*

*மத்தேயு 28:18-20ல் நமது ஆண்டவர், தமது பிரதான கட்டளையைக் கொடுத்தார். மனித அறிவித்தல் வேறு எதுவும் இதைக்காட்டிலும் முக்கியமானதாக இருப்பதில்லை என்பதால், இது "பிரதானமானது" என்று அழைக்கப்படுகிறது. மனித வார்த்தைகளில் தெரிவிக்கப்பட்ட அல்லது அழிந்து போகும் மனிதருக்கு விடுக்கப்பட்டவற்றில் மிகவும் பிரதான கட்டளை இது என்று மக்கள் இதை விவரித்துள்ளனர். பிரதான கட்டளையானது குறைந்தது ஆறு காரணங்களினால் "பிரதானமானதாக" உள்ளது: (1) இதன் பின்னால் உள்ள திட்டம் (எபேசியர் 3:8-11), (2) இதன் பின்னால் உள்ள அதிகாரம் (7:29; 28:18), (3) இதன் உலகளாவிய இயல்பு (28:19; நடபடிகள் 26:16-18), (4) மக்களை ஒன்றுகூட்டிக் கொண்டுவரும் இதன் வல்லமை (எபேசியர் 2:13-19; 4:4-6), (5) இதன் நிலைப்புத் தன்மை (28:20), மற்றும் (6) ஆத்துமாவின் மதிப்பின் மீதான இதன் வலியுறுத்தம் (16:26).*

## *பிரதான கட்டளை (28:18-20)*

*இயேசு பரலோகத்திற்குத் தமது பிதாவினிடம் திரும்பிச் செல்வதற்கு முன்னர், பூமியில் தமது ஊழியத்தைத் தொடர்ந்து செயல்படுத்தும் வேலையைக் குறிப்பிடுதல் என்ற கடைசிப் பணிப்பொறுப்பு ஒன்றை நிறைவேற்ற வேண்டியிருந்தது. பிரியும் வேளையில் அவர் கொடுத்த இந்தக் கட்டளை, "பிரதான கட்டளை" என்று அடிக்கடி அழைக்கப்படுகிறது, இது முதலில் அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டது; ஆனால் இது "உலகத்தின் முடிவுபரியந்தம்" அவரது சபைக்கு நோக்கங்கொண்டதாக உள்ளது (28:20). இந்தச் செய்தியின் முழுப் பொருளடக்கமும் ஒரு இடத்தில் தரப்பட்டிருப்பது இல்லை. இதன் வெவ்வேறு பகுதிகளை, இயேசு தமது உயிர்த்தெழுதல் மற்றும் தாம் பரத்துக்கேறுதல் ஆகியவற்றிற்கு இடையிலான நாற்பது நாட்களில், வெவ்வேறு நேரங்களில் தெரிவித்தார். இந்தக் கட்டளையின் முழுப்பொருளடக்கத்தைப் பெறுவதற்கு, பரிசுத்த ஆவியானவரால் இதுபற்றி அளிக்கப்பட்டுள்ள விபரங்களை நாம் ஒன்றாக இடவேண்டும் (28:18-20; மாற்கு 16:15, 16; லூக்கா 24:46-49).*

*குறிப்புகள்*

[1]R. T. France, *The Gospel According to Matthew,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 412. [2]*இந்த மொழிநடையை வரையறைக்குட்பட்ட கட்டளையுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்: "போங்கள். போகையில், ... பிரசங்கியுங்கள்" (10:6, 7).* [3]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 746, n. 30. [4]France, 414. [5]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 268.

## ஒரு தொகுப்புரை

*மத்தேயு புத்தகத்தைப் பற்றிய நமது படிப்பானது, வாழ்க்கை என்றால் என்ன என்பது சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்க நமக்கு உதவியது.*

*இந்த இராஜா யார் மற்றும் அவர் ஏன் வந்தார்?* தேவனுடைய குமாரன் நமக்கு இரட்சிப்பைக் கொண்டு வருவதற்காக பூமிக்கு வந்தார்! வெகு காலமாக எதிர்பார்த்த மேசியா, ஒரு கன்னியின் மூலம் பிறந்து, பாவமற்ற வாழ்வை வாழ்ந்து, சிலுவையில் அறையப்பட்டார், மற்றும் மரித்ததிலிருந்து உயிர்த்தெழுந்தார்! அவர் பூமியை விட்டுச் செல்லுமுன், வரப் போகிற அவருடைய இராஜ்யத்திற்கு அஸ்திபாரத்தை இட்டார். இந்த இராஜ்யம் அவர் உயிர்த்தெழும்பிய பின்வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் வந்தது.

*அடுத்ததாக என்ன நடக்கும்?* இயேசு திரும்பவும் வருவார் மற்றும் கடைசி நியாயத்தீர்ப்பு நடக்கும். நாம் ஆயத்தமாக இருக்க வேண்டுமென்றும் மற்றும் அந்த நாளுக்காக ஆயத்தமாக இருக்க வேண்டுமென்றும் இயேசு விரும்புகிறார்! நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகி, புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்ற அவருடைய போதனைகளின்படியே வாழவேண்டும்.